செ.வெ.எண் -03 நாள்:02.03.2020

**அரியலூர் மாவட்டத்தில் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் பார்வையிட்டார்கள்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (02.03.2020) நேரில் பார்வையிட்டார்கள்.

அரியலூர் வருவாய் மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் 35 தேர்வு மையங்களில் 82 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 3765 மாணவர்களும், 4781 மாணவிகளும் ஆகமொத்தம் 8546 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளார்கள்.

மேலும், தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் கொண்டு செல்வதற்கு அரியலூர் மற்றும் உடையார்பாளைம் கல்வி மாவட்டங்களுக்கு 10 வழித்தட அலுவலர்களும், 52 முதன்மைக் கண்காணிப்பாளர்களும், 52 துறை அலுவலர்களும், 73 பறக்கும் படை உறுப்பினர்களும், 560 அறைக்கண்காணிப்பாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்தேர்விற்கான வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களில் அரியலூர் கல்வி மாவட்டத்திற்கு அரியலூர் மாவட்டக்கல்வி அலுவலகத்திலும், உடையார்பாளையம் கல்வி மாவட்டத்திற்கு ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், செந்துறை கல்வி மாவட்டத்திற்கு செந்துறை மாவட்ட கல்வி அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளது

தேர்வுப்பணிகள் சார்ந்து தேர்வு நடைபெறும் நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்கவும், மாணவ / மாணவிகள் குறித்த நேரத்தில் தேர்வு மையத்திற்கு தேர்வெழுத ஏதுவாக போதிய பேருந்து வசதியும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேர்வுகள் அமைதியாக நடைபெற ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் ஒரு ஆயுதம் தாங்கிய காவலர் உட்பட போதிய காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இத்தேர்வினை கண்காணிப்பதற்கு தலைமையிடத்திலிருந்து வயது வந்தோர் கல்வி இயக்குநர் திரு.இராமேஸ்வரமுருகன் அவர்கள் கண்காணித்து வருகிறார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சி.முத்துகிருஷ்ணன், ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**